


காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் காஞ்சிபுரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி பேரணி மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் 10,000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட நிர்வாகிகள் திருமதி மலர்விழி குமார், சன் பிராண்டு ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### இலத்தேரி ரெயில்வே கிராசிங்கில் மேம்பாலப் பணி அமைக்கப்படுமா?

# காட்பாடி ரெயில் நிலைய மறு மேம்பாட்டுப் பணிகள் விரைவுபடுத்தப்படுமா?

## மக்களவையில் - டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக.8-

இலத்தேரி ரெயில்வே லெவல் கிராசிங்கில் ரெயில்வே மேம்பாலம்/சுரங்க பாலம் அமைப்பது, காட்பாடி ரெயில் நிலைய மறுமேம்பாடு பணிகளின் தற்போதைய நிலை குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

சமீபத்திய ரெயில்வே கிராசிங் விபத்து சம்பவங்களைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் இன்டர்லாக் செய்யப்படாத லெவல் கிராசிங்குகளில் குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதியில் காட்பாடி அருகே உள்ள இலத்தேரி ரெயில் நிலையத்தில் உள்ள லெவல் கிராசிங் எண். 57 (LC57) அடிக்கடி ரெயில் போக்குவரத்து, அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்து, நீண்ட நேர மூடல் மற்றும் விபத்து அபாயம் காரணமாக பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத்துகிறது என்பதை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

ரெயில்வே மேம்பாலம் அல்லது ரெயில்வே சுரங்க பாலம் அமைப்பதன் மூலம் LC57 ஐ அகற்ற ஏதேனும் திட்டம் உள்ளதா? ஆம் எனில், அதன் விவரங்கள் தருக? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் யாவை?

NH75 இல் உள்ள காட்பாடி சந்திப்பில் உள்ள சாலை ரயில் பாலம் திட்டத்தின் நிலை, ஒதுக்கப்பட்ட நிதி, டெண்டர் இறுதி செய்தல், எதிர்பார்க்கப்படும் நிறைவு தேதி குறித்தும் மற்றும் காட்பாடி நிலைய மறுமேம்பாடு மற்றும் வேலூர் பைபாஸ் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு பணி தற்போதைய நிலை என்ன?

தேசிய ரெயில்வே நவீனமயமாக்கல் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்கு ஏற்ப இந்தத் திட்டங்களை விரைவுபடுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் ரெயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

ரெயில்வே லெவல் கிராசிங்குகளுக்கு (LCs) பதிலாக சாலை மேம்பாலம் (ROB)/ சாலைக்கு அடியில் பாலம் (RUB) பணிகளை அனுமதிப்பது இந்திய ரயில்வேயின் தொடர்ச்சியான செயல்முறையாகும். இத்தகைய பணிகள் ரயில் செயல்பாடுகளில் பாதுகாப்பு, ரயில்களின் இயக்கம் மற்றும் சாலை பயனர்களுக்கான தாக்கம் மற்றும் சாத்தியக்கூறு போன்றவற்றில் முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. அதன் தாக்கத்தின் அடிப்படையில் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தமிழ்நாடு மாநிலத்தில் ரூ.4,669 கோடி செலவில், இவை திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலின் பல்வேறு கட்டங்களில் உள்ளன.

சென்னை ரெயில்வே டிவிஷன் அரக்கோணம்-ஜோலார்பேட்டை பிரிவில் உள்ள லத்தேரி யார்டில் கி.மீ 136,900-137,000 இல் உள்ள லெவல் கிராசிங் (LC) எண். 57, கேட் சிக்னல்களால் (இடைபூட்டு) பாதுகாக்கப்படுகிறது. இந்த லெவல் கிராசிங்கிற்கு பதிலாக சாலை மேம்பாலம் கட்டும் பணி செலவு பகிர்வு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது. பின்னர், இருபுறமும் அடர்த்தியான மக்கள் தொகை காரணமாக இந்த ROB இன் அணுகுமுறைகளை நிர்மாணிப்பது சாத்தியமில்லை என்று கண்டறியப்பட்டது.

அதன் காரணமாக இந்த பணி மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், உயரம் குறைந்த சுரங்கப்பாதை (LHS) கட்டுமானம் சாத்தியமானது என்று கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி, சுரங்கப்பாதை கட்டுமானப் பணி சமீபத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அமிர்த பாரத் நிலையத் திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பிற்காக காட்பாடி ரெயில் நிலையத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. RPF மற்றும் சாரணர் கட்டிடத்தின் கட்டமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. புறப்பாடு முனையத்தின் அடித்தளம், பல நிலை கார் பார்க்கிங், பார்சல் அலுவலகம், பணியாளர்கள் குடியிருப்புகளின் கட்டமைப்பு பணிகள் மற்றும் RPF பாராக் மற்றும் சாரணர் கட்டிடத்தின் இறுதிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

NH75 இல் காட்பாடி சந்திப்பின் வழியாகச் செல்லும் தற்போதைய இருவழி ROBக்கு அருகில் கூடுதலாக இருவழி ROB அமைக்கும் பணியை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் / இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மேற்கொண்டுள்ளது. பொது ஏற்பாடு வரைபட ஒப்புதல் அளிக்கப்பட்டு வடிவமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காட்பாடி சந்திப்பு நிலையத்தின் முதன்மைத் திட்டம், நிலையத்தின் தெற்குப் பகுதியில் உள்ள தற்போதுள்ள பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் ஸ்கைவாக் மூலம் புறப்பாடு மற்றும் வருகை முனையக் கட்டிடத்துடன் சாலை மேம்பாலம் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வேலூர் பைபாஸ் திட்டத்தில், சென்னை டிவிஷன் அரக்கோணம் ஜோலார்பேட்டை பிரிவில் இலத்தேரி மற்றும் விருஞ்சிபுரம் நிலையங்களுக்கு இடையில் ரயில்வே கி.மீ 137,600700 இல் ஒரு ROB மற்றும் திருச்சிராப்பள்ளி டிவிஷன் விழுப்புரம்காட்பாடி பிரிவில் உள்ள கனியம்பாடி மற்றும் பென்னாத்தூர் நிலையங்களுக்கு இடையில் 140,800900ல் மற்றொரு ROB ஆகியவை அடங்கும். இந்தப் பணிகள் தமிழ்நாடு அரசின் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவால் ஒற்றை சாளர அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

# முத்தமிழறிஞர் கலைஞரின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் - மலரஞ்சலி!



சைதை மேற்கு பகுதி தி.மு.க சார்பில் 139வது வட்டம் ஜாபர்கான்பேட்டை கங்கையம்மன் கோவில் தெருவில் பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில், பகுதிச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவ சிலைக்கு மாவட்ட செயலாளர்–அமைச்சர் மா.சுப்பிரமணியின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், ப.சுப்பிரமணியன் எம்.சி., வி.பி. ஜானகிராமன், த.சம்பத், ஆர்.ரமேஷ், சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன். தா.மோகன்குமார், சை.மு.சேகர், அட்கோ கமலநாதன், ஜி.கே.ராமச்சந்திரன், மதிவாணன், டி.என்.சிவமணி, பொன் ஜெய்சிங், கு.புகழ்வேந்தன், பரத்குமார், பி.எஸ்.முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சுந்தரம், வி.வரதன், மா. ஏழுமலை, பூபதி வெங்கடேசன். மற்றும் ஏராளமான கழக தோழர்கள் கலந்து கொண்டனர். பாபு எல்லப்பன், மா. திலீபன் மதிவாணன், வ.ராதா, டி. சுதாகர் ஆகியோர் நன்றி கூறினர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 வது நினைவு நாளை முன்னிட்டு பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் சென்னிர்குப்பத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நூலக வளாகத்தில் அமைந்துள்ள மார்பளவு சிலைக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஜெயபாலன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஒன்றிய நிர்வாகிகள் அண்ணாமலை, எம். ஜனார்த்தனன் எம்.இளையான், எஸ்.புகழேந்தி, ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், க.பரிமளழகன், நிர்வாகிகள் என்.சண்முகம், திருமலை ராஜ், சுரேஷ், ரமேஷ் பாபு வி.பி. சுகன், ரவிக்குமார் மூர்த்தி கண்மணி, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு இராயபுரம் எம்.சி ரோட்டில் உள்ள கலைஞர் சிலைக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் ஆர். மூர்த்தி, ஜெ.ஜெ. எபினேசர், பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், க.ஜெயராமன், அ.முருகன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், இரா.லட்சுமணன் மற்றும் ந.மனோகரன், ஆர்.வெற்றிவீரன், வி.தயாளன், கமலகண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஏற்பாடு ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

# ஆர்.கே. நகர் மேற்கு பகுதி சார்பில் கலைஞர் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் ! 1000 நபர்ளுக்கு உணவு !

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வழங்கினார் !

சென்னை, ஆக 8

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஏற்பாட்டில் பகுதி அவைத்தலைவர் மாஸ். டி.வெங்கடேசன் தலைமையில் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் (07.08.2025 வியாழக்கிழமை) காலை 11.00 மணியளவில் இ.எச்.ரோடு, மணலி சாலை சந்திப்பில் நடைபெற்றது.

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியும், 1000 பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கினார்.

இதில் பகுதி கழக நிர்வாகிகள் எம்.கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், மாநில சட்டத்துறை துணைச் செயலாளர் என்.மருது கணேஷ், மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், எம்.பி.ஆர்.ராஜன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.எம்.பரசுராமன், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எம்.விமலா, அமைப்பு சாரா ஓட்டுநர் அமைப்பாளர் எ.மோகன், எஸ்.சொக்கலிங்கம், ஜி.ராஜா, கே.ஜானகிராமன், ஏ.தனசேகர், கே.கோதண்டம், கே.யுவராஜ், பி.தேவேந்திரன், ஆ. கோவிந்தராஜ், எஸ்.பொன்ராஜ், எஸ்.பாஸ்கர், பி.ஜெயா, பி.முருகன், என்.சுப்பராயலு, வீ.கார்த்திக், என்.ராஜ், கே. முருகன், க.ரேணுகா, கே. முரளி, எஸ்.சூரியபிரபா, என். மோகனா, எஸ்.பாப்பம்மாள், என்.நூரி, ஆர்.சிவகாமி, பி.கிருஷ்ணவேணி, எச்.அம்பிகா, கே.செல்வி, ஜி.வி.கோபால், ஜி.ராஜேந்திரன், டி.ஜஸ்டின், எம்.நடராஜன், இ.பாலசுப்பிரமணிய, ஆர்.வி.மாசானமுத்து, ஆர்.பழனி, எம்.ரவிச்சந்திரன், ஏ.மோகன், எம்.குப்புசாமி, எம்.வீரதிலகம், ஜி.லட்சுமணன் , பி.எஸ்.வீரா, பாலு(எ) முகமதுஅலி, ஆர்.சீனிவாசன், ஆர்.ராபர்ட், ஜே.அருணா, ஜி.என்.ராகவேந்திரா, கே.சுந்தர்ராஜன், பெ.வெங்கடேஷ், ஆதவன், ஆர்.ராஜா, பி.கணேஷ், ஜே.சி.பீட்டர், ஆர். பொன்ராஜ், கே.விக்னேஷ், இளைஞரணி ஜோஸ்வா, ஏ. இக்பால், கிருஷ்ணகுமார், எம்.நரேந்திரன், எம்.நரேஷ்குமார், விக்னேஷ், ஜி.உமா, ஜி.ஹெச்ராஜு, ஆர்.கோதண்டராமன், கே.பரசுராமன், பி.வீரா, காய்கறிமுருகன், ஆட்டோகுமார், ஆ.மாரிமுத்து, கே.அன்புமணி, தாமஸ், பி.மணி, என்.லாசர், தன்ராஜ், சந்திரா, பிரதாப், சந்திரன், சம்பத்குமார், பி.ஆனந்தன், மற்றும் பாக முகவர்கள், பாகபணியளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஆரணி பேரூர் சார்பில் பேரூர் செயலாளர் பி.முத்து, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ் பொன்னையன் ஆகியோரது ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிலைக்கு மாலை அணிவித்து 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இதில் கரிகாலன், கலையரசி, டி.எஸ். குருவப்பா, டி.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சி .நீலகண்டன், மகேந்திரன், பி. எஸ். பாலகுருவப்பா, சூர்யா, பிரபு, குமார், எல். உதயகுமார். சந்தோஷ், பிரபா. எம். சுல்தான், பாலு. திருமலை, குணவதி. கலையரசி. மெய்யழகி. சின்னப்பொண்ணு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 7 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருவள்ளூர் தொகுதிக்குட்பட்ட நகர, ஒன்றியங்களில் உள்ள கிளைக் கழகங்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்தினை தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் தொகுதியை சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. இராஜேந்திரன் நகர, ஒன்றிய செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் க.திராவிட பக்தன், ஒன்றிய கழக செயலாளர்கள் கூளூர் எம். ராஜேந்திரன், கே. அரிகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர், ப.சிட்டிபாபு, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி , தா. மோதிலால், பொன் பாண்டியன், ஒன்றிய கழக நிர்வாகிகள் தா. நடராஜன், அ.ஆனந்த்ராஜ், கொப்பூர் டி. திலீப் குமார், தகவல் தொழில்நுட்ப தொகுதி அமைப்பாளர் என். சுரேஷ் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி 122வது வட்டம் ஆழ்வார்பேட்டை தெரு டி.டி.கே. சாலை சந்திப்பில், வட்டக் கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜாசுரேஷ்குமார் தலை மையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி முன்னிலையில், தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கலைஞர் திருவுருவ படத்திற்கு மரியாதை செலுத்தி, பொது மக்களுக்கு உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 122வது வட்ட மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழகத்தை சார்ந்த நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.